தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-15402/A/2024**

திரு.T.ரங்கபாஸ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 101.. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.T.ரங்கபாஸ் அவர்கள் QR Code Meeting Link மூலமாக நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வே. மகேந்திரன், பொதுத் தகவல் அலுவலர் /தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 01.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், எருமைப்பட்டி கிராமம், பாலப்பட்டி என்ற ஊரில் இருக்கக்கூடிய அனைத்து கிராம நத்தம் புறம்போக்கு நிலத்தின் சர்வே எண்கள், பயன்படுத்தக்கூடிய நபர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய கிராம நத்தம் நிலத்தின் அளவு, அவர்கள் எத்தனை ஆண்டுகளாக பயன்படுத்துகிறார்கள் மற்றும் அதில் எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது போன்ற தகவல்களை வழங்கக் கோரி 10 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் 31.08.2024 நாளிட்ட கடிதத்தின்படி பதில் வழங்கியுள்ளார். பொது தகவல் அலுவலரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 14.09.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால், மனுதாரர், 25.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரால் கோரப்பட்ட தகவல்கள் அனைத்தும் 31.08.2024 மற்றும் 29.09.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்டது என ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல் மற்றும் ஒப்புகை அட்டையின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் QR Code Meeting Link மூலமாக ஆஜரான மனுதாரர் தனக்கு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலம் முழுமையான தகவல் கிடைக்கப்பெற்றது எனவும், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனக்கு சரியான தகவல்களை வழங்கவில்லை எனவும், ஆணையத்தில் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையான தகவல்கள் என ஆணையம் உறுதி செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவை முற்றாகம் செய்து உத்தரவுடுகிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்</u>** <u>SA–15402–A–2024</u>

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 101..

**<u>மனுதாரர்:</u>**
திரு. L.ரங்கபாஸ்
6/132, பாலப்பட்டி,
எருமைப்பட்டி அஞ்சல்,
எடப்பாடி வட்டம்,
சேலம் – 637101

Copy to File
Je/PA 06.10.2026